செய்யவேண்டுமென்று கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். மற்ற மாநிலங்கள் எப்படி நடந்து கொள்கிறார்களோ அப்படி நடந்து கொள்வதாக மத்திய அரசுக்குத் தெரிவிப்பதாக இருக்கிறோம். இந்த வரியை விட்டுக்கொடுத்தால் 54 லட்சம் ரூபாய் நஷ்டமாகும் என்று கணக்கு இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்கள் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 8, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.

பிரிவு 9 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1974) திருத்தப் பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று கேட்டுக்கொள்கிறேன்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ் நாடு, 1974-ம ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1974).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

* 5—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116-வது பிரிவு, இச்சட்டத்தின் செயல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு விதிகளை இயற்றும் அதிகாரத்தை அரசுக்கு அளிக்கிறது. மேற்சொன்ன பிரிவின் (2) உட்பிரிவு, அரசு விதிகள் இயற்ற வேண்டிய குறிப்பிட்ட வகைகளைச் சேர்ந்த நேர்வுகளைக் குறிப்பிடுகிறது. சமய நிறுவனங்களில் காணிக்கைகளாகச் செலுத்தப்படும் முடி, ஏனைய பொருட்கள் உட்பட இயங்கும் சொத்துக்கள் (அரசு வணிகக் கழகம் உட்பட) எந்த நபர்களுக்கு, எந்த முறையில், எந்த நிபந்தனைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு சமய நிறுவனங்களால் விற்பனை செய்யப்படலாம் அல்லது வேறு வகையில் ஒருவகை செய்யப்படலாம் என்பது குறித்து விதிகளில் வகை செய்வது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, பழனியில் இருக்கும் முடிகளையெல்லாம் தனிப்பட்ட காண்டிராக்டர்கள், எடுத்து நேரடியாக வெளிநாட்டிற்கு அனுப்பி வியாபாரம் செய்து வந்தார்கள். இரண்டு வருஷத்திற்கு முன்பு எந்தக் காரணத்தினால் அந்த வியாபாரத்தை நிறுத்தினார்கள்? இரண்டு வருஷ காலமாக எந்த அளவுக்கு நமக்கு லாபம் குறைகிறது? சர்க்காரே அந்த விற்பனையை எடுத்துக்கொள்வதால் அதிக லாபம் வருமா? அதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கோவில்களுக்கு இருக்கும் மற்றச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கு ஆணையருக்கு ஏற்கனவே அதிகாரம் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் காணிக்கையாக வரும் தலைமுடியைப் பற்றி குறிப்பிடாததால் சில கோவில்களில் விற்பனை செய்யும்போது ஆணையரின் விற்பனை அங்கீகாரம் பெறாமல் அந்தக் காரியத்தைச் செய்து விட்டார்கள். ஆகவே, ஆணையருக்கு அந்த முழு அதிகாரம், தலைமுடி காணிக்கையையும் விற்பனை செய்யும் அதிகாரம் கொடுக்கவேண்டுமென்ற வகையில் இந்தத் திருத்தத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம்.

பழனி கோவிலைப் பொறுத்தவரையில் 4-5 ஆண்டுகள் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் விற்பனை செய்து வந்தார்கள். ஆனால் இயற்கை தலைமுடியை விட செயற்கை தலைமுடிக்கு வெளி நாட்டில் கிராக்கி ஏற்பட்டதால் ஸ்டேட்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

டிரேடிங் கார்ப்பரேஷன் நம்முடைய தலைமுடியை வாங்குவதை நிறுத்தி விட்டார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளாக தலைமுடி விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடந்தது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் அதை ஒட்டு மொத்தமாக சில நபர்களுக்கு ஏலத்தில் விடப்பட்டு, விற்பனை செய்யப்பட்டது. அந்த விற்பனை குறைவாக இருக்கிறது என்றாலும், அந்த விற்பனையை முறைப் படுத்தவேண்டுமென்பதற்காக திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இந்தத் திருத்தத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1974) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஈ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1974.)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

---

* 9—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.